(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 9 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, யூன் 25, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0058 / '09

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபைகளின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் உள்ள காணியின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும்,

(i) வெளிநாட்டவருக்கு, கொம்பனிகளுக்கு, மற்றும் தனிப்பட்டவர்களுக்கு (அவர்களின் நாட்டின் பெயருடன்) வழங்கப்பட்ட காணிகளையும்,

(ii) அதற்குரிய நியதிகள் நிபந்தனைகள், அவற்றின் பெறுமதி மற்றும் வழங்கப்பட்ட காலம் ஆகியவற்றையும்

வெவ்வேறாக அவர் கூறுவாரா?

(இ) (i) தனியார்துறைக்குக் கையளிக்கப்பட்ட, மாற்றப்பட்ட, அல்லது குத்தகைக்கு விடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பெயர்களை அதற்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடனும்,

(ii) அவை வழங்கப்பட்ட கால அளவையும்,

(iii) ஒப்பந்தத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா

(ஈ) இன்றேல், ஏன்?

0202 / '09

2\.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் இறங்குத்துறைகள் சிலவற்றை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி அடிக்கல்கள் நாட்டப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி அடிக்கல் நாட்டுதல் நடைபெற்றது எப்போதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அடிக்கற்கள் நாட்டப்பட்ட இடங்களில் தற்போது அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எந்த இடங்களில் என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0330 / ' 09

3.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அப்பி வவமு - ரட்ட நகமு" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச செயலக பிரிவில் வீட்டுத்தோட்ட கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு,

(ii) இக் கருத்திட்டங்களுக்காக கமத்தொழில் அமைச்சினால், மாகாண கமத் தொழில் அமைச்சினால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தினால் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதியத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(iii) இதன்படி, 2006 ஆம் ஆண்டிலும் 2008 ஆம் ஆண்டிலும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் உரிய காணியின் அளவு வருட வாரியாக எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டை விட வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை,

(ii) இதன்பொருட்டு மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒதுக்குவதற்காக எதிர்பார்க்கப்படும் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379 / ' 09

4.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை பிரகடனத்தின் 09 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழி) பிரேரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் முன்பள்ளி ஆசிரியைகளுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதிகளை மாதாந்தம் வழங்குதல் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) தற்போது மேற்படி பயிற்சி மற்றும் நிதி வசதிகள் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும் ,

(ii) அதன் பிரகாரம், மேற்படி தோழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதி வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0060 / '09

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமியின் காரணமாக இறந்தவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) சுனாமியின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதை மாவட்ட அடிப்படையிலும்,

(iii) அரசாங்கத்தினால் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதை மாவட்ட அடிப்படையிலும்,

(v) 2005 சனவரி 01 முதல் இற்றை வரை ஒரு நாடு என்ற முறையில் குறிப்பாக சுனாமியின் நிமித்தம் நாம் பெற்றுக்கொண்ட மொத்த நன்கொடைகள், உதவிகள் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0203 / '09

6.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்று அமுல்படுத்தப் படுகின்றதா என்பதையும்,

(ii) கடற்றொழிலாளர்கள் மேற்படி ஓய்வூதியத் திட்டத்தின் பங்காளர்கள் ஆகும் போது செலுத்த வேண்டிய நிதி வீதம் எவ்வளவென்பதையும்,

(iii) தற்போதைக்கு ஓய்வூதியம் பெறுகின்ற கடற்றொழிலாளர்கின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஓய்வூதியத் திட்டத்திற்கு அரசாங்கத்திடமிருடந்து நிதி ரீதியான பங்களிப்பு வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அந்த நிதி வீதம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0380 / ' 09

7.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வங்கிகள் பலவற்றுடன் செய்துகொண்ட ஹெஜின் ஒப்பந்தத்தின் விளைவாக வங்கிகளுக்கு 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்படவேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், ஒவ்வொரு வங்கிக்கும் செலுத்தப்படவேண்டிய பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0061 / '09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச வியாபார கூட்டுறவு மொத்த விற்பனைக் கம்பனி லிமிட்டை ஆரம்பிக்க எண்ணிய திகதியையும்,

(ii) அது உண்மையில் நிறுவப்பட்ட திகதியையும்,

(iii) கம்பனியன் மூலதனத்தையும் அதன் பணிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் பெயர்களையும்,

(iv) அது கூட்டிணைக்கப்பட்ட தினத்திலிருந்து இற்றைவரையான சகல இறக்குமதிகளையும்,

(v) கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்களையும் விலைகளையும், அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற கேள்விப்பத்திர சபையின் இறுதி விதப்புரையினையும் (CATB) அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(vii) மாத அடிப்படையில், இற்றை வரையிலான, கம்பனியின் மொத்தப் புரள்வையும் இலாபத்தையும்,

(viii) இலாபத்திற்கும், புரள்விற்கும் இடையிலான விகிதத்தினையும்,

(ix) அரச வியாபாரக் கூட்டுறவு மொத்த விற்பனைக் கம்பனி லிமிட்டெட்டினால் வைத்திருக்கப்படும் சந்தைப் பங்கினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) நாட்டில், மாவட்ட அடிப்படையில், நுகர்வோர் வியாபாரக் கடைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ள கடைகளின் எண்ணிக்கையையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0204 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் வருடத்தில் லோன்லைன் மீன்பிடி முறைக்காக கடற் றொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியதா என்பதையும்,

(ii) ஆமெனில், ஒவ்வொரு மாவட்டத்திற்குமேற்ப அவ்வாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) லோன்லைன் மீன்பிடி முறைக்கு கடற்றொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0382 / ' 09

10.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசாங்கம் / இலங்கை மத்திய வங்கி கடந்த 2 ஆண்டு காலப்பகுதியில் தனியார் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி கடன் பெறப்பட்ட வங்கிகளும், பெறப்பட்ட கடன் தொகையும் யாதென்பதையும்,

(ii) மேற்படி கடன் தொகையும், அதற்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் நிதி நிர்வாகம் பற்றிய அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளதால் மேற்படி தனியார் வங்கிகளிலிருந்து குறிப்பிட்ட கடன்களைப் பெறுவதற்காக பாராளுமன்றத்தின் அனுமதி பெறப் பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இல்லையெனில், மேற்படி கடனைப் பெறுவதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு மீறப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும் பி. ப. 1.00 மணி முதல் 4.30 மணிவரையும் இருக்குமாக. பி. ப. 1.00 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2), — 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளு மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2009 யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி. ப. 1.00 மணி முதல் பி. ப. 3.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 149, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இருநூறு மில்லியன் (ரூபா 200,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 149 | — | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆக்கப்பொருட் செலவினம் ரூ. | 200,000,000 |
| | | ரூ. | **200,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 ஆம் 2 ஆம் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 2,749,830,000.

*3.

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 114, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம்

பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து இருநூற்று தொன்னூற்றியொன்பது மில்லியன் எட்டு இலட்சத்து முப்பதினாயிரம் (ரூபா 2,299.83.மில்லியன்) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு : 114 | — போக்குவரத்து அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 2 | —அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | மீண்டுவரும் செலவினம் | ரூ. 2,299.83 மில்லியன் |
| | | ரூ. **2,293.83 மில்லியன்** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 இன் குறைநிரப்பும் மதிப்பீட்டின் மொத்தம் ரூபா. 450,000,000.

*4.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*7.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*8.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*9.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

27.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

30.

வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.